# உலகப் பொதுமறை வள்ளுவம்

உலகத் திருக்குறள் இரண்டாவது மாநாடு-2020
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
பிப்ரவரி 21, 22, 23

பதிப்பாசிரியர்கள்
கலாநிதி க.சுதாகர்
பேராசிரியர், முனைவர் கி.விசாக ரூபன்.
கலாநிதி கே.ரீ.கணேசலிங்கம்
சி.சூரியகுமார்
சி.நிரோசன்

தொகுப்பாசிரியர் :
**உடையார்கோயில் குணா**

**உலகத் திருக்குறள் மாநாடு - 2020**
**இலங்கை**

தமிழ்த் தாய் அறக்கட்டளை வெளியீடு - 19

உலகப் பொதுமறை வள்ளுவம்
உலகத் திருக்குறள் மாநாடு - 2020 இலங்கை

# தேம்பாவணியில் திருக்குறளின் செல்வாக்கு
## தேம்பாவணியின் மூன்றாம் காண்டத்தை மையப்படுத்திய ஆய்வு

**திருமதி. மேரிவினிபிரிடா சுரேந்திரராஜ்**
விரிவுரையாளர்: கிறிஸ்தவ நாகரிகத்துறை
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்,
யாழ்ப்பாணம், இலங்கை.

37

### அறிமுகம்

செந்தமிழ் மொழியின் சிறப்பை எடுத்துரைத்து உயர்வளித்தவர் வீரமாமுனிவர். அவரின் ஆக்கங்களில் திருக்குறள் சார்ந்த ஆக்கங்களும் சிறப்பிடம் பெறுகின்றன. மேலை நாட்டினரும் திருக்குறளை அறிந்துகொள்ள வேண்டும் என்ற உயரிய நோக்கில் கி. பி. 1735 ஆம் ஆண்டு, திருக்குறளின் அறத்துப்பாலையும் பொருட்பாலையும் இலத்தீன் மொழியில் மொழிபெயர்த்துள்ளார். மேலும் திருக்குறளில் 208 குறட்பாக்களைத் தெரிவு செய்து, பாமர மக்களும் எளிதாகப் புரிந்து கொள்ளக்கூடிய வகையில் புதிய முறையில் பேச்சு மொழிநடையில் உரை எழுதியுள்ளார்.

வீரமாமுனிவர் திருக்காவலூரில் தங்கி பணியாற்றிய காலத்தில், பணிக்கென பல்வேறு இடங்களுக்குச் சென்றார். அதன்போது கோனான் குப்பம் என்னும் ஊரில் மறைபோதகப் பணியாற்றச் சென்ற வேளையில் அவ்வூர்மக்கள் வழிபாட்டுக்கு ஆலயம் இன்றி தவித்துக் கொண்டிருந்தபோது கிறிஸ்தவ மறையின் வளர்ச்சியைக் கருத்திற்கொண்டு அவ்விடத்தில் ஒரு ஆலயத்தைக் கட்டினார். அந்த ஆலயத்தில் மரியன்னையின் திருவுருவினை நிறுவி அன்னைக்கு பெரிய நாயகி என பெயர் வழங்கினார். அவ் அன்னையின் திருவருளினாலேயே 1726 ஆம் ஆண்டு தேம்பாவணி என்னும் காப்பியத்தை எழுதினார். இக்காப்பியத்தில் பல அரிய நூல் கருத்துக்களும் பொதிந்துள்ளமை ஆசிரியரது முதிர்ந்த தமிழ் புலமைக்கு எடுத்துக்காட்டு எனலாம். திருக்குறளுக்குப் பின் தோன்றிய தமிழ் நூல்கள் அனைத்தும் திருவள்ளுவர் மொழிப்பொருளை உள்வாங்கியுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது. அதனடிப்படையில் வீரமாமுனிவர் திருக்குறளின்

பால் கொண்டிருந்த விருப்பினால் அந்நூலின் சொல்லையும் பொருளையும் எடுத்துரைக்கும் வகையில் தேம்பாவணியில் திருக்குறளின் தெள்ளிய மணம் கமழச்செய்துள்ளார். இது அவரின் ஆழ்ந்த தமிழ் புலமையை எடுத்துரைக்கின்றது.

இக் காப்பியமானது ஸ்பானிய மொழியில் ஆகிர்த மேரி எழுதிய 'கடவுளின் நகரம்' என்னும் உரைநடை நூலில் காணும் செய்திகளின் அடிப்படையில் எழுதப்பெற்று, தமிழ் மரபுக்கு ஏற்ப முழுமுதற் காப்பியமாகவே அமையப் பெற்றுள்ளது. இது கருத்துக் கருத்துக்கருவூலம், கற்பனைக்களஞ்சியம், அறியாமை இருளை அகற்றி அறிவொளியைப் பரப்பும் சுடர்விளக்கு, பக்தி நெறியைப் பரப்பும் எழிற்காப்பியம், கத்தோலிக்கரின் நந்தா விளக்கு என்றழைக்கப்படுகின்றது. இதனைத் தனிநாயக அடிகள் 'மேனாட்டுக் கலையாறும் தமிழ்நாட்டுக் கலையாறும் கலக்கும் ஏரி தேம்பாவணி" எனக் குறிப்பிட்டுள்ளார்.

தேம்பாவணியில் மூன்றாம் காண்டத்தில் வளன், மரியாள், திருமகன் இயேசுவின் பிறப்பு, வளர்ச்சி, துறவு நிலை, வளன், மரியின் திருமணம், திருமணம் நடந்த முறை, ஈரறம் இணைந்த ஓரறம், எகிப்தில் அவர்களின் வாழ்க்கை, சூசையின் மரணம், பேயின் தந்திரங்கள், நரகம், இருள், உயிர்த்தெழுதல், பாதாளம், விண்ணுலகு, சூசைக்கு ஆலயம் அமைத்தல் போன்ற பல செய்திகளையும், விளக்கங்களையும் காணலாம். இதில் மரியாள் திருமணமாகும் முன்னும், கருவுற்ற காலத்தும் குழந்தை இயேசுவைப் பெற்ற பின்னரும் தன் கன்னிமை குன்றாதிருந்த இறைத்தன்மையை அறிய முடிகின்றது.

## தேம்பாவணியில் மூன்றாம் காண்டத்தில் திருக்குறளின் செல்வாக்கு

தேம்பாவணியின் மூன்றாம் காண்டத்தில் காணப்படும் பன்னிரண்டு படலங்களிலும் உள்ள செய்யுள்களில் திருக்குறளின் அறத்துப்பால், பொருட்பால் கருத்துக்களின் செல்வாக்கு மிகுந்துள்ளது. இதனைப் பின்வருமாறு நோக்கலாம்.

## 1. பகைமை

தேம்பாவணியின் ஆசிரியர் பகைமை குறித்துத் தெளிவு படுத்துகையில் பகைமை வளரும் முன் அதனை அழித்தலின் அவசியத்தைக் குறிப்பிடுவதோடு, தோன்றிய பகையை முற்றாக அழித்தலின் இன்றியமையாமை குறித்தும் குறிப்பிடுகின்றார். இதன் விளக்கத்துடன் திருக்குறளின் பொருட்பால் கருத்துக்களின் செல்வாக்கு காணப்படுவது குறிப்பிடத்தக்கது.

## 1.1 பகைமை வளரும் முன் அழித்தல்

தேம்பாவணியில் மூன்றாம் காண்டத்தில் குழவிகள் வதைப் படலத்தில் ஏரோதனின் அச்சம் குறித்துக் குறிப்பிடப்படும் பகுதியில் வரும் செய்யுளில் 'தெளிந்த அறிவினை உடையவர் தாம் புத்தி தடுமாறுமாறு தமக்கு நேர்ந்த பகை முதிர்வதற்கு முன், அது வளரும் பருவத்திலேயே அதனை அடியோடு அறுத்தெறிவர்' எனக் குறிப்பிடப்பட்டுள்ளதை அறியலாம். இங்கு ஏரோது மன்னனின் உள்ளத்தில் பேய் வெறி உணர்வை விதைத்து உன் உள்ளத்தைக் கலக்கும் முறையில் இம்மண்ணில் உதித்துள்ள அவ்வேந்தனை உடனே கொல்லுவதே நல்லதாகும் எனத் தூண்டுவதைப் பின்வரும் செய்யுள் தெளிவுபடுத்துகின்றது.

**'உருட்டிய செங்கோல் ஈந்தேஉயிர் உய்வர் எவரும் உண்டோ?..."**
**(படலம்: 25, செய்யுள்: 12)**

மேற்கூறிய செய்யுளில் வரும் பொருள் திருக்குறளின் பொருட்பாலில் பகைத்திறந்தெரிதல் என்னும் அதிகாரத்தில் வரும் பின்வரும் குறளுடன் ஒத்துள்ளது.

**'இளைதாக முள்மரம் கொல்க களையுநர்..." (குறள்: 879)**

முட்செடியை இளம்பருவத்திலேயே வெட்டுதல் வேண்டும். இல்லாவிடில் அது முற்றிய பின்பு அதனை வெட்டுபவரின் கையை முட்செடி துன்புறுத்தும். அதுபோன்றே பகைவரை ஆரம்பத்திலேயே அழித்தல் வேண்டும் என்னும் கருத்தை இக்குறள் வலியுறுத்தி நிற்கின்றது. இச்செய்யுளானது ஏரோது மன்னன் பிறந்த குழந்தை இயேசுவைக் கொலை செய்யத் தூண்டும் வகையில் அமைந்துள்ளது.

## 1.2. பகையை முற்றாக அழித்தலின் இன்றியமையாமை

ஏரோது மன்னன் தனது ஆட்சிக்கு எதிராகப் பிறந்துள்ள இறைமகனாகிய குழந்தையைக் கொல்வது நல்லது என்று தெளிந்து, அறிஞர்களை ஒன்றுகூட்டி இனிமேல் நடக்க இருக்கின்ற செயல்களைக் கூறுங்கள் என்று கேட்டான். அதற்கு நாபன் கூறியதாவது, தன்னை எதிர்நோக்கி வந்த வலிமை மிக்க பகையை முதலில் எண்ணாமல் சோம்பியிருந்து வலிமை வாய்ந்த பகையை முதலிலேயே முழுவதும் அழிக்கத் தவறினால், பின் அப்பகை தம் வலிமைக்கு மிஞ்சி வளர்ந்த காலத்தில் அதனை அழிக்க முடியாமல் பகைவரால் இழக்கப்படும் நிலைக்கு ஆளாவர் எனக் கூறினான். இதனை, குழவிகள் வதைப் படலத்தில் வரும் நாபன் நயப்புரை பகுதியிலுள்ள பின்வரும் செய்யுள் தெளிவுபடுத்துகின்றது.

**'துஞ்சித் திண்பகை முன்துடை யாதார்..."**
**(படலம்: 25, செய்யுள்: 24)**

இக்கருத்தைப் பின்வரும் விளக்கத்தையுடைய திருக்குறளில் காணலாம். செய்யத் தொடங்கிய செயல், அழிக்கத் தொடங்கிய பகை இவை இரண்டிலும் மிகுதி இருந்தால் அவை தீயின் மிகுதி போல வளர்ந்து அழிக்கும். எனவே எதையும் முழுமையாகச் செய்தல் வேண்டும். புகையை முற்றாக அழித்தல் வேண்டும் என்பதை வலியுறுத்துகின்றது.

**'வினைபகை என்று இரண்டின் எச்சம் நினையுங்கால்..."**
**(குறள்: 674)**

தோடர்ந்து நாபன் நயப்புரையில் வரும் விளக்கத்தில், நாபன் கூறியதாவது, அருமையான மக்களைக் காக்கும் நீ ஓர் உயிரைக் கொல்லா விட்டால் அது குற்றமாகும். மக்களைக் காப்பதற்காகப் பகைவனைக் கொல்வது தளராத செங்கோல் ஆட்சி செலுத்தும் மன்னனின் கடமை என்றான். இதனை, குழவிகள் வதைப் படலத்தில் நாபன் நயப்புரையில் வரும் பின்வரும் செய்யுள் தெளிவுபடுத்துகின்றது.

**'பாயா வேங்கையை என்புளி பைம்பூ..."**
**(படலம்: 25, செய்யுள்: 28)**

மேற்கூறிய செய்யுள் பின்வரும் திருக்குறளின் செல்வாக்கைக் கொண்டுள்ளது,

# திருக்குறள் முதலாம் அதிகாரம் கடவுள் வாழ்த்தில் காணப்படும் கருத்துக்களுடன கத்தோலிக்க மக்களின் புனித நூலான திருவிவிலியத்தின் நற்செய்தி ஏடுகளில் காணப்படும்; கருத்தொற்றுமை - ஒரு ஒப்புநோக்கு

38

அருள்திரு ரூபன் மரியாம்பிள்ளை எம்.பில் எம்.ஏ
(ஜேணலிசம் அன் மாஸ் கொமினிசேன்)
மேநாள் ஊடக வருகை விரிவுரையாளர் யாழ் பல்கலைக்கழகம்
ஊடக வருகை விரிவுரையாளர் இலங்கை திறந்த
பல்கலைக்கழகம் நிறுவக இயக்குனர் பிசப் சவுந்தரம் மீடியா
சென்ரர் யாழ்ப்பாணம் இலங்கை

2020ஆம் ஆண்டு பெப்பிரவரி மாதம் 21 22 23 ஆம் திகதிகளில் உலக தழிழாராய்ச்சி நிறுவனம் சென்னை மதுரை காமராஜர் பல்கலைக்கழக தமிழ்த்துறை மற்றும் இதய நிறைவு தியான அமைப்பு என்பவற்றுடன் இணைந்து தஞ்சாவூர் தழிழ்த்தாய் அறக்கட்டளை யாழ் பல்கலைக்கழகத்தில் நடத்தும் உலகத் திருக்குறள் இரண்டாவது மாநாடு 2020 பன்னாட்டு கருத்தரங்கில் திருக்குறள் முதலாம் அதிகாரம் கடவுள் வாழ்த்தில் காணப்படும் கருத்துக்களுடன கத்தோலிக்க மக்களின் புனித நூலான திருவிவிலியத்தின் நற்செய்தி ஏடுகளில் காணப்படும்; கருத்தொற்றுமை ஒரு ஒப்புநோக்கு என்னும் தலைப்பிலான ஆய்வுக்கட்டுரையை சமர்ப்பிப்பதில் மகிழ்வடைகிறேன்;.

திருக்குறளில் கூறப்பட்டிருக்கும் கருத்துக்கள் உலகின் பல்வேறு சமயங்கள் போதிக்கும் கருத்துக்களுடன் ஒப்பிடப்பட்டு அது பல்வேறு சமயக்; கருத்துக்களுடனும் பொருந்துவதாக பல ஆய்வுகள் செய்யப்பட்ட நிலையில் திருக்குறள் முதலாம் அதிகாரம் கடவுள் வாழ்த்தில் காணப்படும் கருத்துக்களுடன கத்தோலிக்க மக்களின் புனித நூலான திருவிவிலியத்தின் நற்செய்தி ஏடுகளில் காணப்படும்; கருத்தொற்றுமை பற்றிய இந்த ஆய்வுக் கட்டுரையை அந்த ஆய்வுகளுக்கு மேலும் வலுச் சேர்க்கிறது.

**'கொலையின் கொடியாரை வேந்துஒறுத்தல் பைங்கூழ்..."**
**(குறள்: 550)**

கொடியவர்களுக்கு மரண தண்டனை கொடுத்துத் தக்கவரைக் காப்பதானது, உழவன் களையைக் களைந்து பயிரைக் காப்பதற்குச் சமம். இங்குத் திருக்குறளின் இக்கருத்தை மேற்கூறிய தேம்பாவணி செய்யுள் வெளிப்படுத்தி நிற்பதைக் காணலாம்.

## 3. உள்ளத்தின் உணர்வை முகம் வெளிப்படுதல்

எருசலேம் நகரை ஆண்டு வந்த ஏரோது மன்னனைக் காண்பதற்காக மூன்று ஞானிகள் வருகை தந்தனர். அவர்கள் ஏரோதனிடம் வானில் புதிய விண்மீன் ஒன்று கண்டோம். மன்னராகிய இறைமகன் பிறந்துள்ளார் என்று அறிந்து அவரைக் காண்பதற்கு இங்கு வந்துள்ளோம் என்றனர். இதனைக் கேட்ட ஏரோது மன்னன் நீங்கள் சென்று குழந்தையை வணங்கி விட்டு மீண்டும் என்னிடம் வந்து கூறுங்கள், நானும் சென்று வணங்குவேன் என்றான். சென்ற மூவரும் எருசலேமிற்குத் திரும்பி வராததை மன்னன் அறிந்ததுடன், இடையர் சென்று குழந்தையைத் தரிசித்தது, சிமியோன் அக்குழந்தையைக் குறித்து ஆலயத்தில் கூறியவை அனைத்தையும் கேட்ட ஏரோது மன்னன் இவற்றைப் பற்றிச் சிந்தித்து தன்னுள் ஆராய்ந்து துன்பம் பெருக, அகத்துள் அச்சம் கொண்டான். மேலும் நாபனின் நயப்புரையிலும் ஏரோதனின் சினம் தணியாத முகமானது மனத்தில் உள்ள அவனின் துன்பத்தை வெளிக்காட்டியது. இதனைத் தேம்பாவணியில் குழவிகள் வதைப் படலத்தில் வரும் நாபன் நயப்புரை பகுதியின் பின்வரும் செய்யுள் தெளிவுபடுத்துகின்றது.

**'என்றான் ஆடி அடுத்தவை என்னத்..." (படலம்: 25, செய்யுள்: 21)**

மேற்கூறிய செய்யுள் பின்வரும் திருக்குறள் கருத்தை உள்வாங்கியுள்ளது.

**'அடுத்தது காட்டும் பளிங்கு போல் நெஞ்சம்..." (குறள்: 706)**

தன்னை அடுத்த பொருளைத் தன்னிடம் காட்டும் பளிங்கு போல ஒருவனுடைய நெஞ்சில் மிகுந்துள்ளதை அவனுடைய முகம் காட்டும் என்னும் குறளின் கருத்து ஏரோது அரசனின் முகத்தில் தென்பட்ட துன்பத்தையும் அவரது அகத்துள் ஏற்பட்ட அச்சம்

உணர்வையும் வெளிக்காட்டத் தேம்பாவணியின் ஆசிரியருக்கு உதவியுள்ளது.

இதே திருக்குறளின் கருத்தைப் பின்வரும் கருத்துடைய செய்யுள் உள்வாங்கியுள்ளது. அதாவது தெளிவைத் தன்னிடம் கொண்டுள்ள கண்ணாடி தன்னை அடுத்துச் சேர்ந்தவற்றை உருவமாகக் காட்டும். அது போலவே, மயக்கத்தைத் தன்பால் கொண்டுள்ள கனவும் மனத்தில் மிகுந்த உணர்வுகளைக் காட்டும். அவ்வாறு, பிள்ளை மீது அருள் கொண்டுள்ள தாய் மரியாள் பிரிந்த தன் பிள்ளையைக் கனவில் காண்பாள் அச்சத்தைத் தன்னிடம் கொண்டுள்ள பேதை போர் வினைக்கு உரியப் படை தன்னை வந்து எதிர்ப்பதாகக் கனவில் காண்பாள் எனப் பின்வரும் செய்யுள் வலியுறுத்துகின்றது.

**'தெருள்புறங் கொண்ட வத்தஞ்..." (படலம்: 29, செய்யுள்: 12)**

மேலும் தேம்பாவணியின் முதற் காண்டத்தில் ஐயம் தோற்று படலத்தில் வரும் ஒன்பதாவது செய்யுளிலும் மேற்கூறிய திருக்குறளின் செல்வாக்கைக் காணலாம்.

## 4. இல்லற வாழ்வின் மேன்மை

இல்லறம் நல்லறமாக அமைய வேண்டுமாயின் கணவன், மனைவி நற்குணமுடையவர்களாக இருத்தல் வேண்டும். அவ்வாறு அமைந்தால் நல்ல குடும்பம் என்ற சிறப்பை பெறமுடியும். நல்லறங்களிலே சிறந்த சக்கரியாவும் எலிசபெத்தும் இதற்குச் சான்றாக வாழ்ந்ததோடு, வயது முதிர்ந்த காலத்திலும் யாவரோடும் அன்போடு பழகியும், துன்புற்றவர்களுக்குத் துணை புரிந்தும் நல் இல்லற வாழ்வு வாழ்ந்து வந்தனர். இதனை கருணையன் மாட்சிப் படலத்தில் வரும் பின்வரும் செய்யுள் தெளிவுபடுத்துகின்றது.

**'அல்லறத் துளங்கு திங்கள் அணிந்தமீன் பரப்புப் போலப்..."**
**(படலம்: 26, செய்யுள்: 1)**

இங்கு இல்லறமே நல்லறம் என்பதனைக் கூறவந்த வீரமாமுனிவர் அதனை வள்ளுவரின் கருத்தை அடியொற்றியே கூறுகின்றார்.

**'அறனெனப் பட்டதே இல்வாழ்க்கை அஃதும்..." (குறள்: 49)**

அறம் என்று சிறப்பிக்கப்பட்டது மனைவியுடன் வாழும் இல்

வாழ்க்கையேயாகும். அவ்வாழ்க்கையும் பிறரால் பழிக்கப்படாமல் இருக்குமானால் நல்லது என்னும் கருத்தை முன்வைக்கின்றது.

## 5. கல்வியின் சிறப்பு

மனிதர்களை ஒருவர் ஒருவரிடமிருந்து வேறுபடுத்தி, அவர்களின் நல் வாழ்வுக்கு வழிகாட்டுவது கல்வி. தேம்பாவணியில் உழைத்து உண்ண முடியாதவர்களுக்கும், நோய் மிகுந்தவர்களுக்கும், பொய்யான ஆசையால் நல்லறிவு இழந்தவர்களுக்கும் ஏற்ற துணையாக இருந்தும், அன்பு கொண்டும், மலர்ந்த முகத்தோடு இனிய சொற்களைப் பேசியும் அவர்களுக்குத் தேவையான உதவிகளை வளன் செய்தார் என்பதை அறியலாம். வளனின் அருள் மொழிகளைக் கேட்டு மெய்யுணர்வு கொண்ட மக்கள் அவரைக் காண்பதற்காக வருகின்றனர். அப்பொழுது அவர்களிடம் இவ்வுலகையும் இவ்வுலகிலுள்ள பிறவற்றையும் படைத்தவன் இறைவன். அவரை வணங்குவதே கல்வி என்னும் சிறந்த இன்பத்தால் அடையக்கூடிய பெரிய பயன் என்று அனைவருக்கும் கூறுகின்றார். இதனை ஞாபகப் படலத்தில் சூசையை மக்கள் சூழ்ந்து கொள்ளுதல் என்னும் பகுதியில் ஆசிரியர் தெளிவுபடுத்துகின்றார்.

**'ஓர்என் பான் உலக ஒருங்குடன் படைத்தபின் நீதிச்..."**
**(படலம்: 27, செய்யுள்: 26)**

இச்செய்யுளின் கருத்து பின்வரும் கருத்துடைய திருக்குறளைச் சார்ந்துள்ளது. தூய அறிவு வடிவாக விளங்கும் இறைவனுடைய நல்ல திருவடிகளை வணங்காது இருப்பாரானால், அவர் கற்ற கல்வியினால் ஆகிய பயன் என்ன?

**'கற்றதனால் ஆய பயனென்கொல் வால்அறிவான்..." (குறள்: 2)**

## 6. ஈகையின் பயனும் மேன்மையும்

வீரமாமுனிவர் தேம்பாவணியில் ஞாபகப் படலத்தில் வளன் தன்னை நாடி வந்த பலருக்கும் நல்ல அறங்களை எடுத்துக் கூறி விளக்கு போலத் (ஒளியாக) திகழ்ந்தார் என்கின்றார். அவரின் அறநெறியைக் கேட்டு அறியப் பெருஞ்செல்வம் படைத்தவர் வந்தனர். செல்வத்தின் பயன் குறித்து வளன் கேட்டபோது அவர் கூறிய கருத்தாவது, செல்வத்தின் பயனை அடைய வேண்டுமானால் புகை போல் மறையும் இயல்புடைய பொருளை மேன்மையாய் வாழ்பவர்களுக்குக் கொடுப்பது தாழ்ந்து செல்லும் இயல்பை

உடைய ஆற்று நீரானது வயலுக்குப் பாயாமல், ஆழமான நீரை உடைய கடலை சேர்வதைப் போன்றாகும். எனவே, வறியவர்களுக்கே பொருளைக் கொடுக்க வேண்டும் என்பதைக் குறிப்பிடுகின்றார்.

**'வீழ்ந்த வர்க்குஉத வியில மேன்மையில்..."**

**(படலம்: 27, செய்யுள்: 34)**

வறியவர்க்கு ஒரு பொருளைக் கொடுப்பதே ஈகை எனப்படுவது, மற்றவர்க்குக் கொடுப்பதெல்லாம் பயன் எதிர்பார்த்துக் கொடுக்கும் தன்மை உடையது என்னும் பின்வரும் குறளின் செல்வாக்கைக் காணலாம்.

**'வரியார்க் கொன்று ஈவதே ஈகைமற் றெல்லாம்..."**

**(குறள்: 221)**

தேம்பாவணியில் செல்வர்களுக்கு அறிவுரை கூறும் வகையில் அமைந்த பகுதியில் கலிலேயா நாட்டில் நெற்றலி மாநகரில் வாழ்ந்த தொபீயன் என்ற பெருஞ்செல்வனைப் பற்றிக் குறிப்பிடுகின்றார். அவர் பொருட் செல்வத்தோடு அருட்செல்வத்தையும் ஒன்றாகப் பெற்றிருந்தார். அன்னம் என்ற கற்புடைய மனைவியையும் தயோதரன் என்ற மகனையும் உடையவர். தொபீயனும் அன்னமும் இல்லறத்திலிருந்தே நல்ல அறங்களைச் செய்து வாழ்ந்து வந்தனர். தன் நகரில் வாழ்ந்த மக்களின் வறுமையைப் போக்கிய அவர்கள், நீனிவே என்னும் பெருநகரில் வாழ்ந்த எளிய மக்களின் வறுமையையும் போக்கினார். பின்னாளின் அவர்கள் பெரும் துன்பம் அடைந்தபொழுதும் கொடைகள் வழங்குவதிலிருந்து அவர்கள் மாறவில்லை என்பதைப் பின்வரும் செய்யுளில் எடுத்துரைக்கின்றார்.

'மின் சுடரப் பொழி முகில் போல் புற நாட்டு அன்னார்..." (படலம்: 27, செய்யுள்: 42) புடமிட்டுச் சுடச்சுட ஒளிவிடுகின்ற பொன்னைப் போல் தவம் செய்கின்றவரைத் துன்பம் வருத்த, வருத்த மெய்யுணர்வு மிகும். அதாவது தம்மைத் தாமே வருத்திக் கொண்டு ஒரு குறிக்கோளுக்காக நோன்பு நோற்பவர்களை எந்தத் துன்பங்கள் தாக்கினாலும் அவர்கள் சுடச்சுட ஒளிவிடும் பொன்னைப் போல் புகழ் பெற்றே உயர்வார்கள். என்னும் பின்வரும் கருத்துடைய திருக்குறளின் செல்வாக்கைக் காணலாம்.

'சுடச்சுடரும் பொன்போல் ஒளிவிடும் துன்பம்..." (குறள்: 267)

## 7. அறம் செய்தலின் பயன்

வளனிடம் கேட்கப்பட்ட வினாவிற்குப் பதிலாய் அமையும் பின்வரும் செய்யுள் அறம் செய்தலின் மேன்மையை உணர்த்துகின்றது. இம்மை, மறுமை பற்றிக் கேட்கின்ற பொழுது இறைவன், முள் நிறைந்த காட்டிலும் மழை பெய்யும் மேகம் போல், தான் பொழிந்து கொடுத்த பொருளாகிய செல்வம் வீணானது என்ற முறையில் கீழ்மக்களுக்கும் மிகுதியாக வழங்குவார். ஒப்பற்ற மாண்புள்ள அருட்செல்வத்தையோ ஆசைக்கு அளவாக யாவரும் கைக்கொண்டு சிறக்கும்படியான வலிமை தந்தான். அவ்வாறு இருக்க, மயக்கம் தரும் பொருட்செல்வமும் ஏனைய சிறப்புக்களும் ஒருவனுக்குக் கிடைப்பது அவன் முற்பிறப்பில் செய்த அறத்தின் பயனென்று சொல்லலாமோ? என வளனிடம் சிவாசிவன் என்பவர் மறுமைப் பயன் பற்றிக் கேட்கின்றார்.

**'தெருள் செல்வம் மிக்க இறையோன்**
**முள் திலத்தும் பெய் முகில்..."**
**(படலம்: 27, செய்யுள்: 98)**

பின்வரும் கருத்தை உடைய திருக்குறள் இக்கருத்தைச் சார்ந்துள்ளது. அதாவது பொருள்களாகிய செல்வங்கள் இழிந்தவரிடத்திலும் உள்ளன. அருளாகிய செல்வமே செல்வங்களில் சிறந்த செல்வமாகும். அதாவது செல்வங்கள் பலவற்றுள்ளும் சிறந்தது அருள் என்னும் செல்வமே. பொருட்செல்வம் இழிந்த மனிதரிடமும் உண்டு என்பதைப் பின்வரும் திருக்குறள் குறிப்பிடுகின்றது.

**'அருட் செல்வம் செல்வத்துட் செல்வம்**
**பொருட்செல்வம்..." (குறள்: 241)**

## 8. புலனடக்கம்

வளன் தன்னை நாடி வந்த மக்களுக்கு அறிவுரை கூறினார். அவர்களுள் போர் வீரனாகிய வாமனும் ஒருவன். அவன் காம இச்சை கொண்டவனாக இருந்தான். தன்னுடைய குற்றங்களுக்காக வருந்திய அவன், ஒழுக்கத்துடன் வாழ விரும்பி வளனிடம் அறிவுரை கேட்டான். அப்பொழுது வளன், வாமனையும் எகிப்து நாட்டு மக்களையும் பார்த்து மெய், வாய், கண், மூக்கு, செவி ஆகிய

ஐம்பொறிகளையும் தீமையான வழியில் செலுத்தாமல், தனக்குத் துன்பம் வரும் பொழுது தலையையும் நான்கு கால்களையும் தன் ஓட்டிற்குள் மறைத்துக் கொள்ளும் ஆமையைப் போல இருக்க வேண்டும் என்றும் தீப்பொறி பறக்கும் நரகத்தை எப்போதும் நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும் என்றும் வாமனையும் எகிப்து நாட்டு மக்களையும் அறிவுறுத்தித் தேற்றுகிறார். இதனை வாமன் ஆட்சிப் படலத்தில் வரும் சூசை, வாமனுக்கு உபதேசம் செய்தல் பகுதியில் காணலாம்.

'ஐம் பொறிப் பகை கண்டு அஞ்சி, அடக்கலின் ஆமை போல்வாய்..." (படலம்: 28, செய்யுள்: 150)

இதே கருத்தைப் பின்வரும் திருக்குறளின் கருத்தோடு ஒப்புநோக்கத்தக்கது

'ஒருமையுள் ஆமைபோல் ஐந்தடக்கல் ஆற்றின்..." (குறள்: 126)

ஒரு பிறப்பில் ஆமை போல் ஐம்பொறிகளையும் அடக்கியாள வல்லவனானால், அது அவனுக்குப் பல பிறப்பிலும் காப்பாகும் சிறப்பு உடையது. அதாவது, ஆமை தன் நான்கு கால், ஒரு தலை ஆகிய ஐந்து உறுப்புகளையும் ஆபத்து வரும்போது ஓட்டுக்குள் மறைத்துக் கொள்வது போல, ஒருவன் தன் ஒரு பிறப்பில் மெய், வாய், கண், மூக்கு, செவி ஆகிய ஐந்து பொறிகளையும் அறத்திற்கு மாறான தீமை வரும்போது அடக்கும் ஆற்றல் பெறுவான் என்றால், அது அவனுக்குப் பிறவி தோறும் ஏழு பிறப்பிலும் அரணாக இருந்து உதவும்.

## முடிவுரை

வீரமாமுனிவர் தேம்பாவணி இலக்கியத்தை 'கடவுளின் நகரம்" என்னும் உரைநடை நூலில் காணும் செய்திகளின் அடிப்படையில் எழுதினாலும் அதில் தமிழ் மரபுக்கு ஏற்ப திருக்குறளின் கருத்துக்களையும் உள்வாங்கியுள்ளார் என்பது போற்றுதற்குரிய விடயமாகும். தேம்பாவணி இலக்கியத்தின் மூன்று காண்டங்களிலும் திருக்குறளின் செல்வாக்கு மிகுந்து காணப்பட்டாலும் இவ் ஆய்வானது தேம்பாவணியின் மூன்றாம் காண்டத்தில் செல்வாக்குச் செலுத்தும் திருக்குறள் கருத்துக்களை மையப்படுத்தியுள்ளது. தேம்பாவணியின் மூன்றாம் காண்டத்தில் ஆசிரியர் திருக்குறளின் அறத்துப்பால், பொருட்பால் கருத்துக்களை அதிகமாக உள்வாங்கி

வாழ்வுக்கு வழிகாட்டும் பல அறநெறிகளை எடுத்துரைத்துள்ளார் என்பதில் ஐயமில்லை.

## உசாத்துணை நூல்கள்

1. கமலா, மு., (2009), 'தேம்பாவணியில் திருக்குறளின் தாக்கம்", கிறிஸ்தவ தமிழ் இலக்கிய வளம், சென்னை, முல்லை நிலையம்.
2. பிலேந்நிரன், ஞா., (2009), தமிழ்க் கிறிஸ்தவ இலக்கியங்கள், யாழ்ப்பாணம்: ஆயர் இல்லம்.
3. சோமசுந்தரம் பிள்ளை, மா., (2007), திருக்குறள் உரை விளக்கம் (அறத்துப்பால்பொருட்பால்), சென்னை: மணிவாசகர் பதிப்பகம், பாரிமுனை.
4. மரிய அந்தோணி, (1982), வீரமாமுனிவர் எழுதிய தேம்பாவணி மூன்றாம் காண்டம், பாளையங்கோட்டை: வீரமாமுனிவர் ஆய்வுக் கழகம், தூய சவேரியார் கல்லூரி.
5. தண்டபாணி தேசிகர், ச., (1981), திருக்குறள் உரைக்களஞ் சியம், மதுரை: காமராசர் பல்கலைக்கழகம்.
6. பண்டார நம்பியார், ஈ., (1970), தமிழ் வளர்த்த தைரியநாதர் என்னும் வீரமாமுனிவர், மதுரை: பூமகள் பதிப்பகம், நாகர் கோயில்.
7. செந்துரை. மு., (1965), தேம்பாவணிச் செல்வன், சென்னை: சேகர் பதிப்பகம்.
8. ஆரோக்கியம் பிள்ளை, ரா. லே., (1964), வீரமாமுனிவர் அருளிச்செய்த தேம்பாவணி, தூத்துக்குடி: தமிழ் இலக்கியக்கழகம்.